ஸ்ரீ

கண்ணன்துணை.

பாலூர்

அமிர்தகவிராயர்

பாடிய

# கோகுல சதகம்.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1914

விலை பை 9

ஸ்ரீ
கண்ணன் துணை.

# கோகுல சதகம்.

## காப்பு.

கட்டளைக்கலித்துறை.

சீர்மேவு பாடியில் வாழண்டர் செல்வஞ் செழிப்புறவே
எர்மேவு சோகுல மேன்மைச் சதக மிசைப்பதற்கு
நீர்மேவு மண்ட சராசர மியாவுமோர் நீள்சுடருங்
கார்மேவு முந்தியிற் காத்தான் கழலிணை காப்பதுவே.

---

## நூல்.

கட்டளைக்கலித்துறை.

மணங்கொண்ட வேதன் முகத்திற் புயத்தில் வளர்குறங்கிற்
கணங்கொண்ட பாதத்திற் றோன்றிய நான்கும் கவின்பெறவே
பணங்கொண்ட பாம்பணை யானமிர் தூறுமிப் பார்தழைக்கக்
குணங்கொண்டு முன்வரு மன்பர்தங் கோத்திரர் கோகுலரே. (க)

அண்டங்க ளாயிர கோடியுண் டாக்க வலர்ந்தவிதழ்
முண்டக னாகிப் பராபரன் பாரில் முறைதிறுத்த
மண்டலத் தேவகி டால்வசு தேவன்கை வாய்க்கப்பெற்ற
கொண்டலை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலரே (உ)

மழையானை யெட்டக் கரத்தானைத் தன்பதம் பற்றினருக்
கிழையானை யானைமுன் னேயெதிர் வானை யெழிற்கருணை
மழையானை ரோகணிப் பாலுதித் தானை மலிந்தவொரு
குழையானை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௩)

நிலவிய வண்டம் பகிரண்ட கோடியை நேர்படைத்து
நலமுள தாமரை நாபியிற் காத்தவன் நாரணற்குப்
பலவித மாகிய பூச்சூடு நூற் றெண் பதியுரைக்கக்
குலவிய பாட லுரைத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௪)

மழவியல் பாக மடிமீ திருத்தி வனசமுகத்
தழகுந் திருவு மருந்திக்கண் ணுவன்பு மானமறைப்
பழமிது வேயெனப் போற்றிய கண்ணனைப் பாரிற்றங்கள்
குழவியைக் காப்பிடு பாடலு ரைத்தவர் கோகுலரே. (௫)

தேறப் புவியின் மறையைக் கடைந்து திரட்டமுதம்
ஏறக் கரையினில் வைத்தது போல வெடுத்ததமிழ்
மீறப் பதின்மர்க ளுலாயி ரத்தினு மெய்ப்புகழைக்
கூறச் சிறந்து வளர்வோர்கள் பாடியிற் சோகுலரே. (௬)

பண்டா டியதழ லாடியும் பாம்பின் படத்திலன்பு
கொண்டா டியுமொன் று மாய்நின்ற மாலண்ட கோளமெல்லாம்
உண்டாடி யுங்கடு கொவ்வாத வாயி லுறியின் வெண்ணெய்
கொண்டாடி யுண்டு தெவிட்டச்செய் தாரவர் கோகுலரே (௭)

முறையாக நற்றவஞ் செய்திடு வோருடன் முற்றுநின்று
மறையாமற் றேவர்க்கு மாந்தர்க்கும் வேள்வி வகுத்தருளை
நிறைவாகத் தந்து மலர்வாச முற்று நிலைத்த செல்வங்
குறையாத பின்னை யெனுந்திரு வீன்றவர் கோகுலரே. (௮)

தொடுத்தகல் யாணத் தெருசேழ் கொடுநிற்கச் சூதச்சுரர்
எடுத்தெறி யத்தெய்வ வுருவாகி யோங்கிய வேற்றைவெல்ல
அடுத்துநங் கண்ண னிவரை யழைக்கவந் தகனடுங்கிக்
கொடுத்தா னுயிரைப் பிழைத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௯)

ஞாலங்கண் டோங்கிய நான்முகன் கண்ணுதற் றேவர்கண்ணும்
ஆலங்கண் டோடிய வயிராணி கேள்வற் கலர்ந்தகண்ணும்
மூலங்கண் டோமெனுங் காண்பரி தான முகுந்தன்மணக்
கோலங்கண் டேகண் குளிர்ந்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௧௦)

நளிர்மலர் நாப னயந்தண்ட ருய்ய நடுக்கடலை
ஒளிர்மலை மத்திற் கடைந்ததிற் றோன்றிய வொண்பொருளிற்
றளிரியல் பார்ந்த திருவை மணந்துபின் றந்தமுதைக்
குளிர்ந்தன்பு கூர்ந்து கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (௧௧)

வானென்ற சொர்க்கப் புரந்தரன் றானு மாலயனுந்
தேனென்ற சொல்லுமை கேள்வனு மற்றுள்ள தேவர்களுந்
தானென் றுலதக் கரசரும் பூணத் தகாவிஜயக்
கோனென்ற மேன்பட்டங் கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே. ()

அடுக்குந் தொழிலவர்க் காகிய தேவிரு தாகப்பெற்றார்
எடுக்குந் தொறுமகி லேற்றமுண் டேயெங்க ளாரணனே
தொடுக்குங் கருணை புரிந்தே தனது சுடர்க்கரத்தாற்
கொடுக்கக் கருடக் கொடிபடைத் தாரவர் கோகுலரே. (௧௩)

நற்றாஞ் சுருதியுங் காணாத நாரண னற்றுளபம்
பெற்ற திருவின் னசைபோன்ற மாரன் பிடித்தவம்பால்
முற்றாஞ் செயஞ்செய்த காலநங னேயின் னமிர்துதவிக்
கொற்றந் தருமுல்லை மாலையைத் தாங்கினர் கோகுலரே. (

மண்டலந் தன்னி னிலணைந்து கூறதில் வண்மைபெறுந்
தண்டலை நன்னதி சார்மயி லானிரை தார்குருந்து
விண்டலத் தோர்மகிழ் வேய்ங்குழ லோசை விளங்குபை
கொண்ட வளந்தரு முல்லைத் தலைவர்கள் கோகுலரே.

ஆவர்த் தனையுள்ள வெத்தனை யோகுடி யாய்த்தழைத்தோர்
மாவர்த் தனையுள்ள முல்லை நிலத்தர் மலர்நிறைந்த
காவர்த் தனையுள்ள யமுனையுங் காவிரி காளிந்தியுங்
கோவர்த் தனமலை யுள்ளோர்கள் பாடியிற் கோகுலரே. (௧௬)

வேலாயு தம்பிடித் தான்முரு கேசன்வெள் வெற்புறைவோன்
சூலாயு தம்பிடித் தான்சசி காந்தன் சுடரும்வச்சிர
மேலாயு தம்பிடித் தான்கஞ்ச னேவிய மேதிக்கன்றைக்
கோலாயு தம்பிடித் தானுபர் பாடியிற் கோகுலரே. (௧௭)

தலஞ்சுத்தி யாகவுந் தார்வேந்தர் சென்னி தரிக்கமுடி
நலஞ்சுத்தி யாகவு நானிலத் தாலய நான்மறையோர்
பலஞ்சுத்தி யாகவும் பதினெட்டுச் சுத்தங்கள் பண்ணவுநற்
குலஞ்சுத்தி யாம்பஞ்ச கௌவிய மீந்தவர் கோகுலரே. (௧௮)

சுற்றிய பாரிலுண் டாகிய தோற்றஞ் சுகம்பெறவே
மற்ற முயற்சியில் வருவதுண் டோவளங் கூர்சதுர்த்தர்
பற்றியுந் தங்க டொழில்கடைத் தேறியப் பலனுறவே
கொற்றநல் லேறு கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௧௯)

புழுங்கிய கோபத்தி லந்தகன் சாபம் பொறுத்தவங்கி
மழுங்கிய தன்னுரு வோடு மறைந்திட மன்னுயிர்கள்
அழுங்கிய போதினி லந்தணர் யாக மனைத்துஞ்செய்யக்
கொழுந்தனல் காட்டு மரணிதந் தாரவர் கோகுலரே. (௨௦)

பிலமா ம லங்கையை வென் றுகற் பாகிய பெண்ணரசை
நலமாக மீட் டு வரும்போது தண்டக நன்முனிவர்
பலமா மிராம னைத் தழுவ நினைக்கவப் பாடியினீர்
குலமாத ராகப் றக்க வளர்த்தவர் கோகுலரே. (௨௧)

உண்டா கியபதி னாறா யிரம்பெண்ணை யோங்குகண்ணன்
கண்டான் கமலத் திருவொப்ப வேகலி யாணஞ்செய்யப்
பண்டான வூர்வலம் வாழ்நாக தல்வி பரிமளமர்
கொண்டாடி பேழ்தினஞ் சோபனம் பாடினர் கோகுலரே. (௨௨)

பண்டான வாய்மை நினைந்தே மலரயன் பாரதனில்
உண்டான கண்ணன் றிருவிளை யாட லுணர்த்தக் கன்றுந்
தொண்டான வாய ருடன்மறைத் தேகவுந் தோன்றுருவங்
கொண்டானை யன்புடன் கொண்டாண்ட செல்வர்கள் கோகுலரே. ()

பாடிக்கொ ணாத னெண்ணிரண் டாயிரம் பாவையரில்
நாடிக்கொண் டேயொன்று தாவென்ற போதினி னானின்மையைத்
தேடிக்கொண் டேகெனக் கண்ணினிற் றோன்றுந் திருவுருவாய்க்
கூடிக்கொள் செல்வப் பதிபெற்ற பேறவர் கோகுலரே. (௨௪)

நீட்டுற்ற சாய்கையின் சூர்மாவை வேல்கொடு நீக்கிவெற்றி
காட்டு முருகர்க்கு மேனடு வான கனலிறைக்குந்
தேட்டுக் குரிய விளைநாடி யேற்றிற் றிருகுபுரிக்
கோட்டுத் தகர்பெற வீந்தவர் பாடியிற் கோகுலரே. (௨௫)

சமர்தனிற் சூரனை வேல்கொடு தாக்கிச் சயம்புரிந்தே
அமரரைக் காத்தவன் பன்னிரு தோண்மறைத் தௌவைதன்னைக்
கமாரி முல்லையிற் காத்திருந் தேபரி காசஞ்செய்யக்
குமரனு மேதிகண் மேய்க்கப்பெற் றாரவர் கோகுலரே. (௨௬)

மாரியி னேர்கொடை யீந்தோர்க ளௌவை மனங்குளிரச்
சீரிய வாடை கொடுத்தோர்கள் போசனஞ் செய்பநல்ல
மூரிய பொன்னிலை யீந்தோர்கள் பாரி யெனவொழிந்த
கூரிய வள்ள லுதித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௨௭)

தணவாத நீதி புரிந்தோர் மகுடந் தரித்தனந்தன்
பணமாகத் தாங்கிய சேரனுஞ் சோழனும் பாண்டியனுங்
கணமாகச் சோபனப் பந்தலிலேநின்று கையதனாற்
குணமாய் மணமிடக் கலியாணம் பெற்றவர் கோகுலரே. (௨௮)

வடியாய்ப் பனந்துண்டு மூன்றா சாகிய மன்னவர்க்குத்
துடியாக மூன்று பழந்தரலாலவர் தோத்திரஞ்செய்
படியார்க் கெளியரு மிச்சிக்க நாள்கெனும் பாடல்பெற்ற
குடியார் பெரிய கொடையாற் பெரியவர் கோகுலரே. (௨௯)

தண்டா மரைப்பெண்ணைத் தாம்பெற்ற தாலுந் தரணிச்செல்வம்
உண்டான வாய்மை யுடைமையி னாலு முணர்ந்தௌவையார்
பண்டாங் குடியிற் பெரியோ ரெனச்சொன்ன பாடறனைக்
கொண்டே பெரும்புகழ் கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (௩௦)

பணத்தா யிரஞ்சென்னிச் சேடனு மேத்தப் பகர்ந்தவிலக்
கணத்தான் மிகுந்தவ ரௌவையை யோர்சொற் கழறிவெல்ல
மணத்தா மரைக்கை மணிப்பொற் கடகத்தை வாங்கியவள்
குணத்தாற் கொடுக்கப் புனைந்தவர் பாடியிற் கோகுலரே. (௩௧)

பிலமா மிராகவன் காதையைக் கம்பன் பெருகச்செய்ப
நலமா மதிலொரு சீரிற் சமுசய நாடவிடத்
தலமாந் திசைசொலைச் சரஸ்வதி சாற்றத் தயிர்கடையுங்
குலமாது மாசப்பெற் றாரவர் பாடியிற் கோகுலரே. (௩௨)

தொடுத்தநற் கற்புடைக் கன்னகை கேள்வன் றுயரதனாற்
கடுத்து வருகின்ற போதவள் கொங்கைக் கம்பறித்து
விடுத்தவள் கூடற் பதியினி லாயர்பெண் வெண்ணெயப்பக்
கொடுத்த வரம்பெற்று வாழ்வோர்கள் பாடியிற் கோகுலரே. (௩௩)

ஆடற் பதிக்கு நிகர்கடம் பாடவி யானதிலே
தேடற் கரிய பொருளைக்கண் டேதமிழ் செப்பியவர்
நாடத் தயவு புரிந்தேபின் பாக நடந்துவருங்
கூடற் பதிச்சொக்கரை யேவல்கொண் டோரவர் கோகுலரே. (௫௪)

நம்பிட வேயிடைக் காட்டேரி வீசனை நாட்டிவைத்துச்
சொம்பிடக் கண்டனன் பாண்டின் பாதத் துணையில்விழ
அம்பிடு சென்னிய னன்பனைப் போற்றென வன்றரசன்
கும்பிடச் சொக்கரைக் கோவில்வைத் தாரவர் கோகுலரே. (௫௫)

நாலா கலைக்கென்றும் வல்லவர் சோதனை நற்பலகை
மேலா யிருந்தான் கீழாகி நின்றிட மேன்மைபெற்று
நாலா நிறைகின்ற பேரொழு தாமன்முன் னற்றமிழாற்
கோலா கலச்சங்கம் வென்றோர்கள் பாடியிற் கோகுலரே. (௫௬)

சங்கத்தை வென்றவர் மங்காதநீதி தமிழுரைத்தோர்
துங்கக் கஜேந்திர மோட்சமு மாயிரஞ் சொன்னவல்லோர்
எங்கட் கிறைமகிழ் பாகவதமுமே ழாயிரமாய்க்
கொங்குற்ற வாணி கடாட்சத்திற் செய்தவர் கோகுலரே. (௫௭)

அம்போ ருகனு மறியாத மாய னவதரிக்க
உம்பரு மேற்றிட மண்டல மேற்ற வுலகமெங்குந்
தம்போல் வாழ்வு தழைத்திடக் கஞ்சனைத் தாக்குபதக்
கொம்பான தர்ச்சை பெனுஞ்சத்தி யீன்றவர் கோகுலரே. (௫௮)

மதித்தே வருகின்ற பூதகி யாதி வருபகையை
மிதித்தேறி வென்று முனிந்தே வருகின்ற வேழத்தையும்
எதிர்த்தே மருப்பைப் பிடுங்கியுங் கஞ்சன்மு னேமிக்கண்ணன்
குதித்தே யுதைத்திடு காட்சிபெற் றவர் கோகுலரே. (௫௯)

மாவா யிரம்பல முள்ள பராக்கிரம மல்குகஞ்சன்
மேவா யமபுர மேவிய பின்னர் விளங்கவெங் தந்
தேவாதி தேவ னெனவுக்கிர சேனனைச் சீர்பெறவே
கோவாய் மௌலி தரித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௪௰)

கஞ்சனைப் பெற்ற வுக்கிர சேனனைக் காசினியின்
மிஞ்சிய நீதி செலுத்தர சாக்கிப்பொன் வீதிவலம்
நெஞ்சி லுவந்திவ ரைப்பதி னாயிர நீள்பெரியோர்
குஞ்சர மேற்ற வருவோர்கள் பாடியிற் கோகுலரே. (௪௧)

ஞானக மாயக் குரூர ரழைக்ககன் மாமதுரைத்
தானநல் வீதியிற் கஞ்சனற் றூசுகள் தந்தியின்மேல்
ஆன பொதியைப் பறித்துப்பீ தாம்பர மானவெல்லாம்
கோனகர் பார்க்கப் புனைந்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௪௨)

ஒலிபெறு மேகங்க ளேழையு மேவ வுவரியெல்லா
மலிவுடன் மாந்திப் பொழிந்து வருந்தி மகபதிபான்
மெலிவினைக் கூறிட மேதினிக் கோவலர் மெய்ப்புகழைக்
குலிசனு மேத்தப்பெற் றூரவர் பாடியிற் கோகுலரே. (௪௩)

நடையாய் மகரத்திற் செய்கின்ற பொங்கலை நாரணன்றன்
தடையாக வுட்கொண்ட தென்றறி யாமற் சதமகத்தான்
படையாக மேகங்க ளேழையு மேவப் பரனெடுத்த
குடையான கோவர்த் தனநீழ னின்றவர் கோகுலரே. (௪௪)

மணமுற்ற முல்லை புனைவீர கோதனன் மாயவனைப்
பணமுற்ற சேடனு மேத்த நினைந்து பலவிதத்தால்
உணர்வுற்று நாணப் பதினா யிரம்விப்ர ருண்ணவன்னங்
குணமுற்று வாய்த்தர லாற்றிரு வீன்றவர் கோகுலரே. (௪௫)

மாதனங் கோடி மணிப்பணிப் பேழை மலர்மங்கைநேர்
சாதனச் சேடியர் நூற்றெண்மர் பெண்ணினிற் சார்சிவிகை
சீதனத் தேனு பதினாயி ரம்பல சீர்சிறக்கக்
கோதனன் பெண்ணைக் கண்ணனுக் கீந்தவர் கோகுலரே. (௪௬)

தளவமொப் பாமெனக் கட்டமிர் தாயர் தனையருடன்
உளமகிழ் மாயனுங் கொண்டே யமுனையி னுண்ணவக்கால்
வளமுடன் றங்க ளனமீந்து மாலுக் கவரமிர்தங்
குளவுங் கொடுத்துண் டகமகிழ் வோரவர் கோகுலரே. (௪௭)

துடிகோத் திரமெனச் சொல்வார்க ளொன்றைச் சுதரிசனன்
அடிகோத் திரமிளை யாகும தோவன்று நாரதனும்
படிசோத் திரமனை யைந்து நிலத்தினும் பார்த்துவந்த
குடிகோத் திரமுடன் வாழ்வோர்கள் பாடியிற் கோகுலரே. (௪௮)

அன்றுமை யூர்திரு வேங்கடன் சந்ததி யாரொருவர்
கன்றொடு காலியை முல்லையிற் காக்கும் கடும்பகலிற்
றின்றிட வந்திடுந் தேவா வமிர்தத்தைத் தினேதினமுங்
குன்றெந்த் தாருடன் கூடியுண் டாரவர் கோகுலரே. (௪௯)

நன்று கவிதன்ற கோடான கோடிக ளல்லமிர்தந்
தின்று ரதிற்பலங் கண்டதொன் றில்லைச்சிற றுயர்க்கன்பி
னென்றுய்க் கவளங் கொடுத்தத னாலுட லோடவற்குக்
குன்றாப் பதவி கொடுக்கப்பெற் றாரவர் கோகுலரே. (௫௦)

மாகன கத்தரு வீன்றன காளிங்கன் வாழ்தடத்தி
னாகன சிற்றரு வாகிய வாயர் நலம்பருகித்
தாக மகற்ற மயக்கிய வல்விடந் தான்முறியக்
கோகன கைக்கட் கருணைபெற் றாரவர் கோகுலரே. (௫௧)

பூபால னஞ்செய்வ ராகுகிப் பாலனம் போந்துசெய்வர்
நாபால னஞ்செய்வர் நல்லமிர் தீந்து நளினமலர்
மாபால னஞ்செய்யு மார்பனு மிச்சிக்க வாழ்வுதருங்
கோபால னஞ்செய்வர் கோபாலர் கோவலர் கோகுலரே. (௫௨)

தவமுள விண்டலத் தண்டான வண்டர்க்குத் தானமிர்தம்
உவகைய தாகவு முண்டிட வன்பி னுதவிசெய்தோர்
புவனமெ லாமிவர் புண்ணிய மேநலம் பொங்குதலாற்
குவலயத் தண்ட ரெனநிகண் டோதிய கோகுலரே. (௫௩)

உணத்தான் பிறந்த வுயிர்களுக் காரமிர் துதவிபகழ்
மணத்தா லவர்க்கு வழுவாமை யாலும் வழங்குநெறிக்
கணத்தாலு முன்மநு வேந்த னறிந்து கனந்தந்திடுங்
குணத்தாற் பொதுவரென் றோதப்பெற் றாரவர் கோகுலரே. (௫௪)

பூபாரந் தீரவுந் தன்கைக் கபாலம் புனனிறைய
மாபா ரதமுடித் தானென்று மெள்ளி மலைக்கடவுள்
நாபாடல் செய்தது நான்முகன் றானு நலமுணர்ந்து
கோபால னென்று வணங்குமப் பேர்கொண்ட கோகுலரே. (௫௫)

தருமன் முதலியோர் தாங்கிய வேடந் தகுதியென்றே
பெருமைய தாக வறிந்தமெஞ் ஞானம் பெரிதுடையார்
இருமையுங் கண்ட சகாதேவ ராப ரின்னுநவே
குருகுலங் சாக்குமென் றேற்றத னுஞ்சேட்டங் கோகுலரே. (௫௬)

பாடற் குருகிமுன் னுடிருப் பாற்கடற் பள்ளிகொள்ளும்
தேடற் கரிய பொருளான நாரணன் றேவரைநீர்
நாடற் குரிய நராக முல்லையி னாணனுய்க்
கூடப் பிறக்க விளையாடல் பெற்றவர் கோகுலரே. (௫௭)

ஆடவந் தோடுயிர் மாய்ந்திடு மூலன்ற னங்கத்திலே
நாட வுயிர்புகுந் தேயவன் செய்து நயந்தபின்பு
தேடரி தானதன் னுடலிற் புகுந்திடுஞ் சித்திகற்றுக்
கூடுவிட் டேவசி சித்தன் மரபினர் கோகுலரே. (௫௮)

ஆயிர நாமத் தவற்குச்செய் பூசனை யானவெல்லாம்
நேய மிவர்கடம் போரு ளாலிறை யேற்றலல்லாற்
றாயினு நல்ல சிதம்பரந் தன்னிற் றமனியப்பொற்
கோயி லமைத்துப சாரஞ்செய் தாரவர் கோகுலரே. (௫௯)

நிலவிய வெள்ளிக் கிரியான கத்தி னிணைந்துநிதம்
நலமுள வேணுவிற் கானங்கள் பாடி நயந்துருகி
அலமா னீங்கிய வானுயர் தோன்று மருளுருவாங்
குலமெனும் பேறதைப் பெற்றோர்கள் பாடியிற் கோகுலரே. (௬௦)

பிரதோடஞ் சேவிக்கும் பெண்மக வேந்தும் பெருமைகண்டு
திரமா மனையிற்சென் றேசமைத் தாளச் சிறுவனப்போ
மறவாமற் பூசனை மண்வீட்டிற் கோவிட மாதுமதைக்
குறையாற் றுடைக்க வதுலிங்க மாக்கிய கோகுலரே. (௬௧)

முழுத்தவர் போற்று மரன்செய்த முப்புர வெஞ்சமரில்
வழுத்துநற் றேரொன்று வானோ ரமைக்க வதிலிருந்து
மழுக்கரன் வெற்றி பெறவே மகிழ்வுடன் வானந்தொடர்
கொழுத்தநல் லேறு கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௬௨)

கவலையில் லாமற் சகத்துயிர் வாழக் கடவுளருந்
தவறிலை யாகத் தருமங்க ளோங்கவுஞ் சான நிங்தே
உவகைய தாகவு மெங்கு நிறைந்தவ னெண்டொடியைக்
குவலய மாவென வாண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (௬௩)

மீறிய ஞானச் சுடர்விளக் கேற்றிய மெய்யுணர்விற்
றேறிய மாதர் சுவையாற் சுகித்துச் செயல்பெறவே
எறிய கோடி யுகம்போய்த் திரித யுகமதனில்
கூறிய மூல ரவதரித் தோங்கிய கோகுலரே. (௬௪)

நலமான பூசையிற் சிற்றுயர் சேட்டிட நல்ல தீர்தம்
இலதேமென் றந்தணர் சீறிய போதவர்க் கீவதுவே
பலனுதும் வேள்வியி லென்னுத மென்றிவர் பண்பையெல்லாங்
குலமாதர் கூறி வணங்கிய பாடியிற் கோகுலரே. (௬௫)

உரைகட வாதவ ரன்பாளர் மாதவ னோரிரண்டு
மரைமலர்ப் பாத மறவாத சிந்தையர் மாயவற்குத்
திரையுறு பாற்கட லீந்து தயிர்நெய் செறியவெஃ றுங்
குரைகடன் மூன்று மமைத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (௬௬)

ஆடலுண் டாகு மயிலு மாவமு மன்பிலொன்றி
காடகின் றேயுற வாடவுங் கேட்டிடு நான்மறையின்
பாடலென் றேவிண் ணவருட் களிக்கப் பசுப்புலியும்
கூட்நின் றேற்கவும் வேணிசை கூறுவர் கோகுலரே. (௬௭)

வளந்தையி லேபிறை போலே தருமம் வளர்ப்பவர்கள்
தளர்ந்தவர்க் கேநடுக் காட்டினிற் பாலனந் தான்கொடுக்க
உளந்தய வானவ ரியாவரு முண்ணு முயர்குலத்தோர்
குளந்தையில் வந்தவர்க் கேவிருந் தேசெய்வர் கோகுலரே (௬௮)

அடுத்தோர் பசுவினுக் கோர்பிடி புல்லை யளித்தவர்கள்
நடுத்தா ரணியினற் பாக்கியம் பெற்றுநற் சேய்கள்பெற்று
எடுத்தோங்கு சொர்க்கம் பெறுவா ரிவரெத் தனைபிடிபுல்
கொடுத்தா ரிவர்பல னளவிற் குறைவிலர் கோகுலரே. (௬௯)

நறுந்திரை வீசிய மூன்றரைக் கோடி நதிப்பலனும்
அறிந்தன வேதத்தி லங்க முரைத்த ததிசயமாய்ச்
செறிந்திவர் தேனுவும் நீருண்டு வால்சுற்றச் சிந்துபுனற்
குறுந்துளிக் கொப்பில்லை யென்றும் புனிதர்கள் கோகுலரே. (௭௦)

மீறத் தவத்தருந் தேவரு நல்வரம் வேண்டத்தரும்
பேறெப் புவிதனி லுண்டென்ப ராணிப் புனிதர்க்கிதந்
தேறப் பலருந் தெளிந்தன்பு கூர்ந்துசெய் தாலுடனே
கூறப் பலிக்குநல் வாக்குள்ள பேறவர் கோகுலரே. (௭௧)

வடிவி லுதித்த பிராமண ராதி வருணங்களும்
படியி லுதித்தபின் நூல்பூண் டிருபிறப் பாளரென்பார்
நெடியவன் றன்னுருப் போலே யகத்தி னினைக்கவன்று
குடிமிமுந் நூலுடன் றன்பிறந் தாரவர் கோகுலரே. (௭௨)

சம்புவி னற்கனி சிற்றாயர் கண்ணனுந் தான்பருக
அம்பொ னிறைந்தன கூடை யெடுத்தவ ளாயர்முன்பாய்த்
தம்பிய ரால்வந்த தென்றன ணீகொண்டு தான்செல்கெனக்
கும்பிட்ட வன்செல வாசையில் லாதவர் கோகுலரே. (௭௩)

தலமெத் தனையுண் டதற்கேற்ற பூசனை தானதர்மம்
பலனைத் தருங்கோடி கன்னிகா தானங்கள் பண்ணிக்கற்பின்
நலமுற்ற கோசலை போலு மசோதை நகர்க்கழகாங்
குலபத்னி மாதருட் பெற்றோர்கள் பாடியிற் கோகுலரே. (௭௪)

மரகத மேனிநம் மாயனும் பால்வண்ண மாதவனுங்
கரசத மாகிய வாயருங் கந்துகங் கண்டடிக்க
உரமிக வெற்றி கவரு மிருவரு முவந்துவந்து
குரகத மேறி விளையாடல் செய்தவர் கோகுலரே. (௭௫)

மண்டலத் தெங்கு முளதாம் பலநகர் வாழ்வதிலே
திண்டிறற் கஞ்சன் வராதவொன் றில்லைசொற் சேர்நகரில்
அண்டப் படாத வரம்பெற்று நாளு மணங்கினருட்
கொண்டுற்ற நற்றிரு வாய்ப்பாடி வாழ்பவர் கோகுலரே. (எசு)

வேலை விடமுணம் மாயோன் விண் ணோர்க்குக் கடைந்தமிர்தம்
உவகைய தாக வொருபாற் கடனி லுதவிசெய்தான்
தவளித பாற்கடத் தேதினைத் தோன் றுந் தனியமிர்தாற்
குவலயந் தன்னிற் கவலைக டீர்ந்தனர் கோகுலரே. (எஎ)

மேவிய தேவ ரனைவரும் ரோமங்கள் வீசியவால்
தேவியு மாயன் மடிநான் முகன்முலைச் சேர்சுருதி
ஆவியு மீச னடித்தலந் தீர்த்த மதின்மயமாங்
கோவினப் பாலனஞ் செய்வோர்கள் பாடியிற் கோகுலரே. (எஅ)

மாறாப் பரிவு டையருங் கண்ணனு மாசுணவர்
ஆறா மெனச்செல வப்புறம் போக்கில்லை யாகநின்று
பேறாய்ப் பசுத்தங்கள் பால்பாதி யீயப்பெற் றேயிரண்டு
கூறாய்க் கிழிக்க மகிழ்வோர்கள் பாடியிற் கோகுலரே. (எகூ)

அடக்க முடையா ரரிய தரும மறிந்து செய்வார்
நடக்கு மறநெறி தான்கட வர்தவர் நாரணர்க்குத்
தொடுக்கும் விளாவினி லாயிநத் தீவர்த்தி தோன் றநெய்யே
கொடுக்க வரங்கள் கருணைபெற் றாரவர் கோகுலரே. (அ௦)

சேவிந்த பூணு மானயன் றானுஞ் சிறந்தோன் றதாய்ப்
பூவிந்த மாக வளர்ந்தோன் றிருப்பெயர் போற்றுதற்கு
நாவிந்த மாக வனந்த மறைகள் நவில்வனபோற்
கோவிந்த பட்டந் தரித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (அக)

தொட்டிர டிக்கொண்டு மண்டலம் விண்டலஞ் சூழ்ந்தளந்த
நெட்டிநற் பாதம் பலதரம் வைக்கு நெடுமனையோர்
பட்டி சுராக்கபி டேக முலைதுடப் பால்சொரியந்
கொட்டிலில் வாழ்பசு வீந்தவர் பாடியிற் கோகுலமே. (௮௨)

நூற்றெண் டிருப்பதிக் காலையிற் பூங்குட ணூற்றுப்பத்தோ
டேற்றநற் பாற்பசுப் பூசனைக் கேற்றன வெப்பொருளும்
நேர்த்தி பெறவைத்து மார்க்கங்கள் தோறு நிறைந்தசத்ரங்
கோத்திரம் வாழவைத் தார்கந்த கோன்குலங் கோதுலமே. (௮௩)

சாத்திரக் கங்கைப் புனல்படி வோர்கட்குச் சார்யமுனை
மாந்திர மப்பல மாடா விடிற்றுறை வந்ததுண்டோ
நேர்த்தி யமுனையுங் காளிந்தி கோதா விரிநினைக்கக்
கோத்திர மோங்கிக் குருவாழ வாழ்கின்ற கோதலமே. (௮௪)

வருதேச காலமி லூத்திரம் போய்வரு மாயவர்க்குத்
தருதேசி பால்சுடத் தன்கையில் வாங்கித் தயவதனால்
அருளேற லூக வனைத்தாய ஞொன் றரங்கர்புகல்
குருதேசிகனைப் பணிவோர்கள் பாடியிற் கோகுலமே. (௮௫)

நளிவா கனம்பெறக் கடல்கடந் தேயவர் நன்மைமனத்
தெளிவாகி யெங்கள் பங்கனைச் சேர்ந்தகஞ் சேருதற்கு
நளிர்மா மலர்முல்லை யாயர்க் கியற்கைநல் வாசமுறுங்
குளிர்வாச சாந்தங் கொடுக்கப் புனைந்தவர் கோகுலமே. (௮௬)

நன்றாள் புவியி லிவர்தேனு நின்றது நாகத்தினும்
அன்றுள வந்த திவர்தேனு வேயகல் பூவுலகில்
என்று மூழவ ரிவர்தேனு வாலூர மேத்திவைத்துக்
குன்றாத செல்வங் கொடுத்தோர்கள் பாடியிற் கோதுலமே. (௮௭)

பண்டாந் தவம்புரி யோர்விந்தி யாதரார் பற்பமின்னை
உண்டான சக்கரத் தேயமைத் தேபுயர் யோகமிகக்
கண்டான் விஜய னற்பேய் பிரவிடை காசினியிற்
கொண்டா னாடதி தங்கோத் திரமெனுங் கோகுலரே. (௮௮)

உள்ள புவியிற பொருள்படைத் தென்ன வுதவுபுனற்
பள்ள நிறைந்த தடாகமுண் டாக்கிப் பரிந்துநிதி
அள்ளிக் கொடுத்து மிவர்தேனு வாய்வைத் தருந்துபுல்லைக்
கொள்ளெண் ணான்கு தருமம் புரிந்தவர் கோகுலரே. (௮௯)

இடிக்கட்டி செய்துமின் னில்லாமன் மேகங்க ளெங்குமின்றிப்
படிக்கட்டி யாண்டு பனிரண்டு வாக்கியம் பண்ணுமன்னர்
மடிக்கட்டி மேட மதினான்கு கோட்கண் மயங்கவென்று
கொடிக்கட்டிக் கொண்ட வீரர்கள் பாடியிற் கோகுலரே. (௯௰)

தலமேழில் மாயன் சமயம் வகுத்திடத் தான்குருவாய்
உலகூடு நான்கு வருணமு மோங்கி யொளிபெறவே
நலமாய் நடுவில் வைணவ நாரண நல்லுருவின்
குலமேவு வைணவ ராகவந் தாரவர் கோகுலரே. (௯௧)

நலத்தன யாகங்க ளுள்ளன செய்து நளிர்புனல்சூழ்
தலத்தைப் புரக்கின்ற கோனாதி நந்தன் சந்ததியாய்ச்
சொலப்புக ழோங்க மநுநெறி யோங்கிடச் சூழ்ந்தமதிக்
குலத்தினி லாதவர் தங்கோத் திரமெனுங் கோகுலரே. (௯௨)

நலத்தைப் பொதுப்பி யருளொன்று நாற்குல நன்குறலாற்
பலத்தி லதிக மிவர்பஞ்ச சௌரியம் பார்கொளலாற்
நலத்தை விளக்கும் புனித மிவர்பொருட் டானென்றதாற்
குலத்திற் றிலதமென் றோதப்பெற் றாரவர் கோகுலரே. (௯௩)

மூலத் திருமரு மார்ப னுருவின் மூளைத்தவர்நற்
சீலத்தர் தேனுவைப் பாலனஞ் செய்பவர் செந்திருமுற்
காலத்திற் பின்னைப் பிராட்டி யெனப்பெற்ற கருணையெனும்
கூலத்தர் ஞானத்தர் மேலுற்ற பாடியிற் கோகுலரே. (கச)

மறையோது வார்முத லாம் வருணங்கண் மாண்புபெற
முறையாக வூணி னறுநெயும் பாலு மோர்பிறவும்
நிறைவாக வேண்டிம வெல்லா முதவிய நீதியினற்
குறையாத செல்வ ரிவரென்ற பேறவர் கோகுலரே. (கரு)

நாவி லனங்கள் புசிப்போர்க்குச் சுத்தியும் நல்கவல்லார்
பூவில் விளங்கிய தேவால யங்களைப் போற்றிடவே
மேவிய திங்களும் வெய்யோனும் போல விடிவிளக்குக்
கோவில் விளங்கநெய் யீந்தவர் பாடியிற் கோகுலரே. (கசு)

நெறிபெறு சேய்க்கும் புகர்க்குநல் லாட்சி நிலைக்கவென்றுஞ்
செறிபல மான மனைபனி ரண்டினுஞ் சேய்முதலாய்
அறிவரி தாமக மேரு முகட்டி லரிதிசையிற்
குறிபெற மேட மிடபம்வைத் தாரவர் கோகுலரே. (கஎ)

காதா லுணர்ந்திடுஞ் சோதிடங் கூறுங் கனயோகமும்
வேதாக மங்கள் விளக்கிய யோகமும் வேறுளதும்
போதா தெனமுன் வியாச ரறிந்திவர் போற்றவளர்
கோதாளி யோக மதிகம தாய்ப்பெற்ற கோகுலரே.

நெறியாற் சகத்தினிற் கீர்த்திபெற் றோர்க ணிறைசெல்
றறிவாளர் பேசிய தல்லாம லன்பரென் றுண்மைபெற்
செறிவான வேதத்தி னங்க மறிந்து செயலையெல்லா
குறியா யுரைத்தமிர் துண்டோர்கள் பாடியிற் கோ

செழும்பாரின் முன்னங் கொடாமற் பிறந்து திரிபவர்க்கு
மழுங்காத செல்வம் வருவதண் டோவதின் வாறறிந்து
தொழும்பாய் வறுமைத் துயர்தாங்கிச் சித்தஞ் சுழல்பவர்க்குக்
கொழும்பா லனங்கள் கொடுக்குந் தியாகிகள் கோகுலமே. (கOO)

அடியிற் பெரிய துலகளந் தானடி யாதிமன்னர்
முடியிற் பெரியது சோழன் திருமுடி முத்தமிழ்சேர்
படியிற் பெரியது பாண்டியன் சங்கமிப் பாருலகிற்
குடியிற் பெரியது கோபாலர் தங்கள் குலக்குடியே. (கOக)

தரங்க மெறியுந் திருப்பாற் கடலிவர் தன்மனைபோல்
அரங்கத் துயிலும் பிரானரு ளாலண்ட ராய்த்தழைத்தார்
வரங்கள் பெறுகின்ற கோகுலப் பாவையர் மகிழ்வடைய
உரங்கொள் பெரும்புகழ் கொண்டார் குருவரு ளோங்கவுமே. (கOஉ)

## வாழ்த்து.

தருவாழி கோவலர் கோக்குடி வாழி கொடிக்கருட
உருவாழி முல்லை நிலம்வாழி யாக்குல மோங்கிவளா
திருவாழி பாடி நகர்வாழி வெற்றி சிறந்தமுல்லை
மருவாழி மாமறை வாழி தமிழ்கிதம் வாழியவே.

## கோகுல சதகம் முற்றிற்று.

ஸ்ரீ

## கோகுலசதகத்தின்

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அ | |
| அடக்க | 14 |
| அடியிற் | 18 |
| அடுக்குங் | 3 |
| அடுத் | 12 |
| அண்டங் | 1 |
| அம்போ | 7 |
| அன்று | 9 |
| ஆ | |
| ஆடலுண் | 12 |
| ஆடவங் | 11 |
| ஆடற் | 7 |
| ஆயிர | 11 |
| ஆவர்த் | 4 |
| இ | |
| இடிக்கட் | 16 |
| உ | |
| உணத் | 10 |
| உண்டா | 5 |
| உரைகட | 12 |
| உள்ள | 16 |
| ஒ | |
| ஒலிபெ | 8 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| க | |
| கஞ்ச | 8 |
| கவலையில் | 11 |
| கவலைவி | 14 |
| கா | |
| காதா | 17 |
| கு | |
| குருவாழி | 18 |
| ச | |
| சங்கத் | 7 |
| சமர்த | 5 |
| சம்புவி | 13 |
| சா | |
| சாத்திரக் | 15 |
| சீ | |
| சீர்மே | 1 |
| சு | |
| சுற்றிய | 4 |
| செ | |
| செழும் | 81 |
| சே | |
| சேவிந்து | 14 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| ஞா | |
| ஞாலங் | 3 |
| ஞானக | 8 |
| த | |
| தணவா | 6 |
| தண்டா | 6 |
| தரங்க | 18 |
| தருமன் | 10 |
| தலஞ் | 4 |
| தலமெத் | 13 |
| தலமே | 16 |
| தவமு | 10 |
| தளவ | 9 |
| து | |
| துடிகோத் | 9 |
| தே | |
| தேறப் | 2 |
| தொ | |
| தொடுத்தகல் | 2 |
| தொடுத்தநற் | 6 |
| தொட்டி | 15 |
| ந | |
| நடையாய் | 8 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| நம்பிட | 7 |
| நலத்த | 16 |
| நலத்தை | 16 |
| நலமா | 12 |
| நளிர் | 3 |
| நளிவா | 15 |
| நறுந் | 13 |
| நற்றுஞ் | 3 |
| நன்றுக | 9 |
| நன்றுள் | 15 |
| நா | |
| நாலா | 7 |
| நாவி | 17 |
| நி | |
| நிலவியவ | 2 |
| நிலவியவெ | 11 |
| நீ | |
| நீட்டுற் | 5 |
| நூ | |
| நூற்றெண் | 15 |
| நெ | |
| நெறிபெ | 17 |
| நெறியா | 17 |
| ப | |
| பணத் | 6 |
| பண்டாடி | 2 |
| பண்டாங் | 16 |
| பண்டான | 5 |
| பழையா | 1 |
| பா | |
| பாடற் | 10 |
| பாடிக் | 5 |
| பி | |
| பிரதோ | 11 |
| பிலமாமிலங் | 4 |
| பிலமாமிரா | 6 |
| பு | |
| புழுங் | 4 |
| பூ | |
| பூபாரங் | 10 |
| பூபால | 10 |
| ம | |
| மணங் | 1 |
| மணமு | 8 |
| மண்டலத் | 14 |
| மண்டலங் | 3 |
| மதித் | 7 |
| மாகத | 13 |
| மழவி | 2 |
| மறையோ | 17 |
| மா | |
| மாகன | 9 |
| மாதளங் | 9 |
| மாரியி | 5 |
| மாவா | 8 |
| மாருப் | 14 |
| மீ | |
| மீறத் | 13 |
| மீறிய | 12 |
| மு | |
| முழுத் | 11 |
| முறையா | 2 |
| மூ | |
| மூலத் | 17 |
| மே | |
| மேவிய | 14 |
| வ | |
| வடிபாய் | 6 |
| வடிவி | 13 |
| வருதேச | 15 |
| வளங் | 12 |
| வா | |
| வானென் | 3 |
| வே | |
| வேலாயு | 4 |


செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமாணிக்கமாமலை

# திருத்தொண்டர் சதகம்.

---

இஃது

காஞ்சீபுரத்தில் தலமூற்றுமென்னும்

கச்சிமயேசுரகுலதிலகராகிய திருப்பாண்டிக்கொடுமுடி

மலைக்கொழுந்து நாவலரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1914

விலை அணா 2

உ

குருவேதுணை.

திருநெல்வேலி புதுத்தெருவிலிருந்த ம-ா-ா-ஸ்ரீ, வித்வான்

அழகிய சொக்கநாதபிள்ளையவர்க ளியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

கொச்சகக்கலிப்பா.

பொன்னிநதிச் சோணாட்டிற் காவிரிப்பூம் பட்டினத்துச்
சென்னியெனு மன்னிகலாற் சிந்தைநொந்து சார்வணிகர்
முன்னியவா றுதரித்துத் தில்லைமூ வாயிரர்போற்
பன்னிருவ ரெனவவரைப் பார்சொலச்சேர்ந் துறைபரமன். (௧)

தோட்போக்கி வாணனைமாய்த் தவன்றுருவப் பாதலக்கீழ்த்
தாட்போக்கி நின்றபிரான் றனிநுதற்கட் டழறபடையால்
வேட்போக்கி மலைமகளை மணந்தருணை வெற்பனைய
வாட்போக்கி சிவதையெனு மாணிக்க மலையமர்ந்தோன். (௨)

அலைக்கொழுந்து முடங்குகங்கை யாற்றினெடுங் கீற்றுமதிக்
கலைக்கொழுந்து படருமுடித் தழும்பர்திருக் கழலிணைக்கே
யிலைக்கொழுந்து மலரின்வகை புலருமென வெழிற்கச்சி
மலைக்கொழுந்து நாவலன்பா மாலைதொடுத் தணிந்தனனால். ()

சாத்திடுமம் மாலிகைப்பேர் திருத்தொண்டர் சதகமலி
தேத்திடுநல் லடியாகத் திருளகற்றி யெப்பற்று
நீத்திடுமெஞ் ஞானநல்கி நிமலனடி நிழலிருத்திக்
காத்திடுநிச் சயமதனைக் காதலா மலகமென (௪)

தேர்ந்துருக்க மிகலானு மகிலமெங்குஞ் சிறக்கவுள்ளங்
கூர்ந்துமேற் கூறியபன் னிருவரெனுங் குழுவினரு
நேர்ந்துசில பத்தர்களும் வேண்டுநிமித் தமதானு
மோர்ந்துபெருங் கல்விபதி யொழுக்கமதா லுபசொருவன். ()

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இந்திரை யான்றுள் பூசித் தின்னருள் பெற்ற நீராற்
செந்திரு வாரூ ரென்னத் திகழ்தலத் துதித்த செல்வன்
மந்திராக் கரங்க ளஞ்சும் வைகலுஞ் சிந்தை செய்வோன்
றந்திர மதியி னான்செந் தமிழ்வளங் கொழிக்கும் வாயன். (௬)

சிவனடி யார்க டம்மை யவனென்னப் பேணுஞ் சீலன்
றவமரு ளுருத்தி ராக்க நீற்றணி தழைக்கு மெய்யன்
கவர்புறச் சமைய மேற்கொள் கண்டகர்க் கசனி போல்வா
னவனியிற் பொறையு ளானென் னனையவர்க் குபிரே யன்னான்

அப்பர்சுந் தரர்சம் பந்த ரருட்டிருப் பாட லெல்லாந்
துப்பவிர் சடையான் காதிற் றும்புரு வெனவே பாடு
மொப்பருஞ் சொக்க லிங்க வோதுவா மூர்த்தியென்னச்
செப்பரி தானம் பெற்ற செகப்பிர சித்த னன்னான். (௮)

### ஷடி வேறு.

கருதுபுபல் பிரதிகளைக் கொண்டுநன்கு பார்வையிட்டுக்
கமழுந் தென்றன்
மருவுமலைக் குறுமுனிவன் கமண்டலமோ தகப்பொருனை
வளப்பந் தன்னாற்
பருவரலி னெல்லைநகர் முத்தமிழா காவச்சிற்
பதிப்பித் தும்ப
நிருசுடர்க ளுள்ளமட்டும் பெருகுபுகழ்ப் பயிரைவளர்த்
திட்டான் மன்னே. (௯)

குருவேல் துணை.